## தலைப்பு 294 – தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்

செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) மீண்டெழும் செலவினங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| காசுப்பாய்ச்சல் கூற்றில் தனிநபர் படிகள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களாக ரூபா 586,163,912 காட்டப்பட்டிருந்த போதிலும் ஒன்று திரண்ட விரிவான பரீட்சை மீதியின் படி அச்செலவினம் ரூபா 608,650,360 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 22,486,448 வேறுபாடு காணப்பட்டது. | எதிர் வருடத்திற்கான கணக்குகள் தயாரிக்கப்படும் போது இச்செலவின விடயங்கள், தனிநபர் படிகள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களின் கீழ் காட்டப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்றில் மீண்டெழும் செலவினங்கள் தொடர்புடைய காசுப் பாய்ச்சல்களினை சரியாக இனங்காணப்படல் வேண்டும். |

**(ஆ) மூலதன செலவினங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் பௌதீக சொத்துக்களுக்கான நிர்மாணிப்பு மற்றும் கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகள் கையேற்றுக் கொள்ளலாக ரூபா 231,811,562 காட்டப்பட்டுள்ள போதிலும் ஒன்றுதிரண்ட விரிவான பரீட்சை மீதியின் படி அச்செலவினம் ரூபா 209,325,114 ஆனதினால் ரூபா 22,486,448 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்வருடத்திற்கான கணக்குகள் தயாரிக்கப்படும் போது இச்செலவின விடயங்கள் தனிநபர் படிகள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களின் கீழ் காட்டப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்றில் மூலதன செலவினங்கள் தொடர்புடைய காசுப் பாய்ச்சல்களினை சரியாக இனங்காணப்படல் வேண்டும். |

**(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக ஒன்று திரண்ட பரீட்சை மீதியின் பிரகாரம் நிரந்தர சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 209,325,114 செலவிடப்பட்டிருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் நிதியல்லா சொத்துக்களுக்கான கூற்றின் பிரகாரம் ரூபா 203,484,842 ஆக இருந்தமையினால் ரூபா 5,840,272 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | சொத்துக்களினை குறிக்கையில் சில வழுக்கள் நேர்ந்துள்ளமையினால் அது தொடர்பாக இதனகத்திற்குப் பின்னர் அரச கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனை பெறப்பட்டு அவற்றினை திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் நிதியல்லா சொத்துக்களின் சரியான பெறுமதியினை காட்டப் படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**(ஈ) ஆவணங்கள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் கீழ் காணும் சில ஆவணங்கள் பேணப்படாதிருந்ததுடன் சில ஆவணங்கள் முறையாக நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாதிருந்தமை மாதிரிக் கணக்காய்வு பரீட்சிப்புக்களின் போது அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) பிணைப் பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 89(1) இன் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்களினது தகவல்களினை உட்படுத்தப்பட்ட பிணை அட்டவணை தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தரினை தற்போதைக்கு இனங்காணப்பட்டுள்ளதுடன் வங்கிக் கணக்குகள் திறக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிதிப்பிரமாணம் 891(1) குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உட்படுத்தப்படும் படியான பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர் பற்றிய பிணை பதிவேடு பேணப்படல் வேண்டும். |
| (ii) சேதங்களுக்கான பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்களுக்கான பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | வாகன விபத்துக்கள் தொடர்பான சேதங்கள் மற்றும் நட்டங்கள் குறிப்பிடப்படுவதற்கு எதிரில் சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடு நிர்வாகப்பிரிவில் பேணப்படுவகற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் அஅதன் கீழான மாதிரியின் பிரகாரம் சேதங்களுக்கான பதிவேடு பேணப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களம் 2021 வருடத்திற்காக தயார் செய்யப்பட்டிருந்த மதிப்பீட்டில் 08 செலவின மதிப்பீட்டில் நூற்றுக்கு 46 சதவீதம் முதல் நூற்றுக்கு 100 வரையிலான வீச்சில் சேமிப்பு அவதானிக்கப்பட்டது. | 2021 வருடத்தினுள் நாட்டில் பரவியிலிருந்த கொரோனா தொற்று நிலைமையும் நாடு முகம் கொடுத்திருந்த பொருளாதார சீட்கேட்டினாலும் மற்றும் கட்டுநிதி கிடைக்காமையும் புதுத் திட்டங்கள் மற்றும் கொள்வனவுகள் மேற்கொள்ளல் ஆகியன வரவு செலவு சுற்றறிக்கை மூலம் இடைநிறுத்தப்பட்டமையும் ஒதுக்கீடுகள் சேமிப்பானதற்கு காரணங்கள் ஆகும். | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் முறையான திட்டம் மற்றும் முகாமைத்துவத் துடன் திட்டங்கள் வகுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்ட மூலத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய கணக்கீட்டு உத்தியோகத்தரினால் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு பயன்தரும் படியான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றினை தயாரிக்கப்பட்டு பேணிச் செல்வதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் உற்பத்தித் திறனினை பற்றி காலத்திற்கு காலம் மீளாய்வினை மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமைகளினை பயன்தரும் வகையில் முன்கொண்டு செல்வதற்கு தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதாகவும் அம்மீளாய்வுகள் | உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் மற்றும் கூட்டங்களின் அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுவதனை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன். | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்ட மூலத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியினை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை | | | |
| (i) XIX அத்தியாயத்தின் 6.1 பந்தி மற்றும் 7.2 பந்தி | ஏதேனும் ஒரு பதவிக்கு ஒதுக்கப்பட்ட இல்லத்தினை தவிர ஏனைய சகல இல்லங்களினதும் குத்தகைக் காலம் 05 வருடம் ஆகுதல் மற்றும் உரிய குத்தகைக் காலம் விஞ்சி இல்லத்தில் வதித்திருக்கும் கால எல்லைக்கான தண்டப்பணம் அறவிடப்படல் வேண்டும். அதற்கு முரணாக 05 வருடத்திற்காக குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்பட்ட 12 உத்தியோகபூர்வ இல்லங்களின் குத்தகைக்கால எல்லையினை விஞ்சப்பட்டு 06 வருடம் முதல் 33 வருடம் வரையிலான காலம் கழிந்து விட்ட போதிலும் தண்டப் பணத்தினையும் செலுத்தப்படாமல் | திணைக்கள நோக்கத்தினை பயனுள்ள வகையில் நிறைவேற்றும் அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்கள் ஒதுக்கிக் கொள்ளப்பட்டுள்ளன. இச் சிறப்பியல்பினை பற்றிக் குறிப்பிட்டு உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான வாடகை அறவிடப்படுவது தொடர்பாக தாபன பணிப்பாளர் அதிபதியின் ஆலோசனைப் பெற்றுக் கொள்ளப்பட்டு அதன்படி எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தாபன கோவையின் ஏற்பாடுகளுக் கமைய செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்கள் திணைக்கள உத்தியோகபூர்வ இல்லங்களில் தரித்திருப்பதனை அவதானிக்க கூடியதாகவிருந்தது. | | |
| (ii) | XIX அத்தியாயத்தின் 7.1 ஆம் பந்தி | இல்லத்திலிருந்து வெளியேறும் படி ஒரு உத்தியோகத்தரிடம் கேட்கப்படும் போது அவர் அவ்வாறு செய்யாது போயின் 1971 இன் 03 ஆம் இலக்கம் மற்றும் 1974 இன் 40 ஆம் இலக்கச் சட்டமூலங்களில் திருத்தப்பட்ட 1969 இன் 07 ஆம் இலக்க அரசுக்குரிய இல்லங்களுக்கான (உரிமையினை மீளப் பெறல்) சட்டமூலத்தின் கீழ் அவரை அவ்விடத்திலிருந்து வெளியேற்றப்படல் வேண்டும். அவ்வாறு இருப்பினும் 05 வருட குத்தகைக் காலம் கழிந்து விட்ட 12 உத்தியோகத்தர்களை வெளியேறும் படி அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக காத்திருப்புப் பட்டியலில் உட்பட்டிருந்த ஏனைய உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்களினை பெற்றுக் கொள்ளும் சிறப்புரிமைகளை இல்லாதுபோய் உள்ளமையினை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) | XIX அத்தியாயத்தின் 8.2 ஆம் பிரிவு | உத்தியோகபூர்வ இல்லத்தின் பராமரிப்புக்கான பொறுப்பினை அளிக்கப்பட்டுள்ள | சகல உத்தியோகபூர்வ இல்லங்களிலும் உபகரணங்கள் மற்றும் பொருத்திகள் ஆகியன தற்போது இன்வென்றி | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதிகாரிகள் ஏனைய உபகரணங்கள் மற்றும் பொருத்திகள் ஆகியவற்றுக்கான இன்வென்டறியினை வைத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டியுள்ள போதிலும் திணைக்களத்தினால் அவ்வாறான இன்வென்றி ஒன்றினை பேணப்பட்டுக் கொண்டு போய் இருக்கவில்லை. | மயப்படுத்தப்பட்டு வருகின்றன. | |
| (iv) | XIX அத்தியாயத்தின் 5:2 மற்றும் 5:3 ஆம் பிரிவுகள் | உத்தியோகபூர்வ இல்லமொன்றில் வதியும் பொருட்டு அதிகாரியின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய இல்லத்திற்கான வாடகை வீதம் நூற்றுக்கு 7.5, நூற்றுக்கு 10, நூற்றுக்கு 12.5 எனும் வகையில் வெவ்வேறாக காட்டப்பட்டிருப்பினும் மிருககாட்சி சாலைகள் திணைக்களத்தினால் தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் உள்ள 25 இல்லங்களிலிருந்தும் அதிகாரியின் சம்பளத்திலிருந்து நூற்றுக்கு 12.5 அறவிடப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் குறிக்கோளினை பயன்தரும் வகையில் நிறைவேற்றிக் கொள்ளும் அடிப்படையில் அதிகாரிகளுக்கான உத்தியோகபூர்வ இல்லங்கள் ஒதுக்கிப் பெற்றுக்கொடுக்கப்பட்டு ள்ளன. இச் சிறப்பியல்பினை பற்றி குறிப்பிட்டு உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான வாடகை அறவிடப்படுவது தொடர்பாக தாபகப் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனை பெறப்பட்டு அதன்படி எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | - மேற்படி - |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>-------------------------- | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) | வாகன விபத்தொன்று நடத்தலின் பூரண அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களுக்கு மேல் | வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) படி நடவடிக்கை | நிதிப்பிரமாணப் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தாமதம் ஏற்படும் என கருதப்பட்டால் உடனடியாக அதற்கான ஆதாரமான அறிக்கையினை அனுப்பப்பட வேண்டியுள்ளதுடன் நட்டம் மற்றும் சேதம் ஏற்படும் திகதியிலிருந்து மூன்று மாதத்தினுள் பூரண அறிக்கைகளினை சமர்ப்பிக்க வேண்டியுள்ள போதிலும் வாகன விபத்து மற்றும் சேதம் ஏற்பட்ட 14 சந்தர்ப்பங்களில் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்வதற்கு தாபன பிரிவிற்கு ஆலோசனை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |
| (ii) | நிதிப்பிரமாணம் 396 | மீளாய்வாண்டு இறுதியாகும் போது சமர்ப்பிக்கப்பட்டு 06 மாத காலம் கழிந்து விட்ட மொத்தத் தொகை ரூபா 82,446 ஆன 15 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணப் படி செயற்பட்டிருக்கவில்லை. | கொரோனா தொற்று நிலைமைகள் காரணமாக காசோலைகள் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதத்தினால் இந்நிலைமை ஏற்பட்டமையும் 2022 மே மாத இறுதியில் அக்காசோலைகள் சமர்ப்பிக்காவிட்டால் பொது வருமானத்தில் சேர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | - மேற்படி - |
| (iii) | நிதிப்பிரமாணம் 571 | இரண்டு வருடங்க்ள கழிந்து விட்ட ரூபா 43,290,219 ஆன பொது வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணப்படி செயற்பட்டிருக்கவில்லை. | 02 வருடங்கள் கழிந்த வைப்புக்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களினை அறிவுறுத்துவதற்கான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் ஒரு மாதத்தினுள் உரிமை கோரப்படாத வைப்புக்கள் பொது வருமானத்தில் சேர்த்துக் கொள்ளப்படும். | - மேற்படி - |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 30/2016 | எரிபொருள் பாவனை, லொக் குறிப்பு புத்தகத்தினை பேணிச் செல்லல், எரிபொருள் செயற்திறனினை அளவெடுத்தல், | சுற்றறிக்கையின் படி செயற்படும் படி திணைக்களத்திற்குரிய சகல உப நிலையங்களையும் அறிவுறுத்துவதற்கான | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் படி சகல வாகனங்களிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |
| (ஈ) பொதுக் கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 270/2019 | ஒன்று திரப்பட்ட பெறுமதியின் மீதான வரிக்கான வதியப்பட்ட திணைக்களங்களை வரி கணக்கிலிடப்படுவதற்காக இலக்கம் 9185 கொண்ட ஒன்று திரப்பட்ட பெறுமதி மீதான வரிக் கட்டுப்பாட்டு கணக்கினை பேணப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனைப் படி சிகாஸ் கணினி முறைமை மூலம் ஒன்று திரப்பட்ட பெறுமதி மீதான வரிக் கட்டுப்பாட்டு கணக்கினை தயாரிப்பதனை மேற்கொள்ளப்பட்டு வருட இறுதிக்கு முன்னர் வரி கணக்கிலிடுவதனை சிகாஸ் முறைமை மூலம் மேற்கொள்ளப்படும். | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படாமல் கைவிடப்பட்டமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களத்தினால் தேசிய இயந்திர சாதனைகள் நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அந்நிறுவனம் செயற்படாமையின் காரணமாக 06 திட்டங்கள் தொடர்பில் ஒப்பந்தங்களினை முடிப்பதற்கு (Terminate) பெறுகைக் குழு முடிவு செய்துள்ளதுடன் அத்திட்டங்களினை மீண்டும் புது ஒப்பந்தக்காரருக்கு பெற்றுக் கொடுக்காது இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளது. அந்நிர்மாணப் பணிகளுக்காக 2021 திசெம்பர் வரை ரூபா 69,558,270 செலவிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் சில திட்டங்களுக்காக தேசிய இயந்திர சாதன நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த Mobilization | நிறுவனத்திடம் பெற்றுத் தரப்பட்டுள்ள பற்றுச்சீட்டுக்களுக்கான தடுப்பு பணமும் திணைக்களத்திடம் இருப்பதனால் திணைக்களத்திற்கு சேர வேண்டிய நட்டத்தினை அறவிடுடப்படுவதற்கான வாய்ப்பினை உள்ளதுடன் தற்போது அந்நிறுவனத்தினால் கைவிடப்பட்ட திட்டங்கள் சிவில் பாதுகாப்பு படையணி மூலம் ஒவ்வொரு திட்டமாக நிர்மாணிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | முடிக்கப்படாது கைவிடப்பட்டுள்ள இந்நிர்மாணப் பணிகள் துரிதமாக பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| Advance தொகையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தொகையினை சீராக்கம் செய்யப்பட்டதன் பின் ரூபா 14,360,310 தொகையினை அறவிடப்பட வேண்டியிருந்தது. | | |

**3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 வருடம் முடிவுறவிருந்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 20,084,630 ஆன கோணபலை பண்ணையில் நிர்மாணிக்கப்பட்ட மிருகப்பாதுகாப்பு மத்திய நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 2021 வருடம் இறுதி வரைக்கும் முடிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கான மீளாய்வாண்டு இறுதி வரைக்கும் ரூபா 14,309,453 சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது. | கோணபலை பண்ணை மிருகப் பாதுகாப்பு மத்திய நிலையத்தின் நிர்மாணப் பணிகள் மேற்கொள்வதிலான தாமதத்தினால் அவ் ஒப்பந்தத்தினை முடிக்கப்படுவதற்கு பெறுகைக்குழு முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்நிர்மாணப் பணிகளில் மீதமுள்ளவற்றை திணைக்கள உத்தியோகத்தர்களைக் கொண்டு முடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | துரிதகதியில் நிர்மாண வேலைகளை முடித்துக் கொள்வதற்கு செயற்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 08 வாகனங்கள் 2014 மற்றும் 2019 வருடம் முதல் 2022 மார்ச் வரையிலும் பாவனை மேற்கொள்ளப்படாது இருப்பதுடன் அவ்வாகனங்களை தள்ளுபடி செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இவ்வாகனங்களை தள்ளுபடி செய்யும் பொருட்டு வாகனங்களின் விலை மனு பெறுமதி மதிப்பீட்டினை மேற்கொள்வதற்காக மோட்டார் வாகன திணைக்களத்திலிருந்து சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் பெற்றுக் கொள்வதற்கு 2022.04.20 திகதி அத்திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் தள்ளுபடி அலுவல்கள் துரிதமாய் முடிப்பதற்கான நடவடிக்கை | வாகனங்களினை தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கை துரிதமாக முடிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | கெப் வண்டி விபத்தொன்று சாரதியின் தவறினால் நேர்ந்துள்ளமையினை 2021 செப்தெம்பர் 11 ஆந் திகதி மீரிஹான, பொலிஸ் தலைமை நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரியினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் மூலம் உறுதியாகியிருந்த போதிலும் அந்நட்டம் உத்தியோகத்தரின் தாமதம், கவனமின்மை, தவறு அல்லது மோசடி காரணமாக நேர்ந்துள்ளதா என்பதனை தேடிக் கண்டுபிடிப்பதற்காக நிதிப்பிரமாணம் 156(i) பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | இவ்வாகன விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் 156(i) பிரகாரம் தற்போது நடவடிக்கை மேற்கொண்டு வருவதனை அறியத் தருவதுடன் இடையிடையே ஏற்படுகின்ற அமைச்சு மாற்றத்தினால் இத்தாமதம் நிகழ்ந்துள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | வாகன திருத்த வேலைகள் மேற்கொள்ள முன் அந்த திருத்த வேலைக்கான தேவைப்பாட்டினை உறுதி செய்யும் பொருட்டு, தொழில்நுட்ப நிபுணர் மூலம் முறையான பரிந்துரையினை பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் 32 சந்தர்ப்பங்களில் அவ்வாறு செயற்படாதிருந்தமையினை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. | மிருகக்காட்சி சாலைகள் திணைக்களத்தில் நிலவும் அவரச, அவசிய நிலைமையினையும், கொரோனா தொற்று நிலைமையினையும் கருத்திற் கொண்டு தொழில்நுட்ப கோளாறு அற்ற சில திருத்த வேலைகள் தொழில்நுட்ப நிபுணரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகளினை தவிர்த்துக் கொள்ளும் படி சகல நிறுவனங்களினையும் வலியுறுத்தப்பட்டுள்ளது. | வாகன திருத்த வேலைகள் மேற்கொள்ளும் போது தொழில்நுட்ப உத்தியோகத்தரின் முறையான பரிந்துரையினை பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன கோவை ஏற்பாடுகளினை திருத்தவேண்டி இருப்பின் அதனை உருவாக்கிய அதிகார சபைக்கு மாத்திரமே அவ்வாறு செய்வதற்கான அதிகாரம் இருப்பினும் குத்தகை காலம் விஞ்சப்பட்டு | திணைக்களத்தின் குறிக்கோளினை பயனுள்ள வகையில் நிறைவேற்றிக் கொள்ளும் அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் இச்சிறப்பியல்பினை பற்றி குறிப்பிட்டு உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான | தாபனக் கோவையின் ஏற்பாடுகளினை விஞ்சி செயற்படக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | இல்லத்தில் குடியிருக்கும் காலஎல்லைக்கான தண்ட வாடகைப் பணம் அறவிடப்பட வேண்டும் எனும் தாபனக் கோவை XIX அத்தியாயத்தின் 7.2 பந்தி, சேவைத் தேவைப்பாட்டின் பொருட்டு பட்டியலிடப்பட்டுள்ளது உத்தியோகபூர்வ இல்லத்தில் குடியிருக்கும் உத்தியோகத்தருக்கு அது சாராதென குறிப்பிடப்பட்டு பணிப்பாளர் நாயதக்தினால் 2016 யூலை 17 ஆந் திகதிய மற்றும் இலக்கம் NGD/AD/02/ Quart /20(vo 1.1) கொண்ட பத்திரம் வெளியிடப்பட்டிருந்தது. | வாடகைப் பணம் அறவிடுதல் தொடர்பாக தாபன பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனை பெற்று அதன் பிரகாரம் எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |
| (உ) | 2016 வருடம் முதல் 2021 வருடம் வரையிலான காலத்தினுள் கோணபல பண்ணையில் பயிர்ச் செய்கை அலுவல்கள் முறையான திட்டத்தின் படி மேற்கொள்ளப்பட்டில்லாத துடன் அதன் பயிர்ச் செய்கையினை அதிகரிக்கப்பட்டு வெளி நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் மிருக உணவு அளவினை குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் மிருக உணவு செலவினை குறைத்துக் கொள்ளும் நோக்குடன் திணைக்களத்திற்கு தேவைாயன இலகுவான முறையில் பயிரிடக் கூடிய துரித விளைச்சலினை பெற்றுத் தரும் படியான பயிர் வகையினை இனங்கண்டு கோணபல பண்ணையின் திட்டத்தினை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பண்ணையினுள் கூடிய விளைச்சலினை பெற்றுத் தரும் படியான முறையான திட்டத்தின் கீழ் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | பின்னவல யானைகள் சரணாலயத்தில் யானைகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுற்றுப்புறத்தில் யானைச் சாணங்கள் மற்றும் அவை உண்டு மிச்சப்பட்ட எச்சில்கள் குவிக்கப்பட்டிருந்த மையினால் அதன் சுற்றுச்சூழல் அசுத்தப்படுத்தப்பட்டிருந்தது. | மழைக்காலங்களில் திணைக்கள ஊழியர்களைக் கொண்டு யானைச் சாணங்களை அப்புறப்படுத்துவதில் சிரமம் உள்ளமையினால், இந்நிலைமை யானைச் சாணங்களை அரைக்கும் இயந்திரத்தினை பொருத்தியதன் பின் குறைத்துக் கொள்ள முடியும். | யானைச் சாணங்கள் மற்றும் மிச்சப்பட்ட உணவு பருக்கைகளை அப்புறப்படுத்து வதற்கான திட்டம் வகுக்கப்படல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் 153 வெற்றிடப் பதவிகள் நிலவியதுடன் அவற்றில் 04 இரண்டாம் மட்டத்திலான பதவிகள் இருந்தமையினால் திணைக்களத்தின் செயற்பாட்டு வினைத்திறன் கீழ் மட்டத்தில் இருந்தது. | திணைக்களத்தில் இரண்டாம் மட்டத்திலான 04 வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | வெற்றிடப் பதவிகளுக்கான ஆட்சேர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | தாபனக் கோவையின் III ஆவது அத்தியாயத்தின் படி மற்றும் 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1589/30 இலக்கத்தினை கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயன் நடைமுறைக்கான சட்டக் கோவையின் XVIII அத்தியாயத்தின் ஆலோசனையின் படி அரச சேவையில் ஒரே இடத்தில் நீண்ட சேவைக்காலத்தினை முடிக்கப்படுகின்ற உத்தியோகத்தர்களிடம் மாற்றத்தினைக்கு உட்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தில் சேவையாற்றும் 30 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், 09 முகாமைத்துவ சேவைகளுக்கான உத்தியோகத்தர்கள் மற்றும் 11 கனிஷ்ட மட்டத்திலான ஊழியர்கள், 05 வருடம் முதல் 15 வருட காலவீச்சில் தொடர்ந்தும் திணைக்களத்தில் சேவையாற்றி வருகின்றனர். | 05 வருடம் பூர்தி செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் வருடாந்த இடமாற்றம் விண்ணப்பிக்கப்பட்டுள்ள துடன் அவர்களின் ஒட்டு மொத்தப் பேர்களுக்கு இடமாற்றப் பணிப்பினை செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும் பலதரப்பட்ட காரணங்களினால் ஏனைய உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் இரத்தாகி உள்ளன. | வருடாந்த இடமாற்றங்கள் முறையாக மேற்கொள் வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |